2012 ஏப்ரல் 11]

திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. மு.வீ. கருப்பையா, திரு. வி. சோமசுந்தரம், திரு. ஏ.கே.டி. ராஜா, திரு. கே. உலகநாதன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகிய உறுப்பினர்கள் வினாக்கள் தொடுக்க உள்ள நிலையில், காலத்தின் அருமை கருதி நாளை இவர்களுக்கு துணை வினா கேட்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**75—**

## தொழிற்பேட்டை

***6690—திரு. அ. பாஸ்கர்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி தொகுதி, கடகத்தூரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, கடகத்தூரில் ஏற்கெனவே சிட்கோ தொழிற்பேட்டை துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சிக்குட்பட்ட சிட்கோ சிறு தொழிற்பேட்டைக்குக் கடந்த ஆட்சியில் நிலம் ஒதுக்கப்பட்டு, இப்பொழுதுதான் மிகத் தாமதமாக சில நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களுக்கு அரசு மானியம் கொடுத்து, சிறு தொழில் நிறுவனங்களை

அமைத்தால், அங்குள்ள மக்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுத்து இந்த நிறுவனங்கள் வேலை கொடுக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடகத்தூர் கிராமத்தில் சிட்கோ தொழிற்பேட்டைக்காக 7.2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, 25 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டன. இதில் 7 தொழில் மனைகள்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக உள்ளன. மீதமுள்ள காலி மனைகளை ஒதுக்கீடு செய்யத்தக்க நடவடிக்கை சிட்கோ நிறுவனத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. சிட்கோ நிறுவனத்தால் மீதமுள்ள மனைகளும் விரைந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

*முற்பகல் 10—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி—ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் உருவகப்பள்ளி என்ற இடத்தில் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் 100 ஏக்கர் பரப்பளவில் சிட்கோ தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, சாலை அமைக்கும் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் எல்லாம் நிலுவையில் உள்ளன. அங்கே சிட்கோ தொழிற்சாலை அமைப்பதன்மூலம் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, நிலுவையில் உள்ள அந்தப் பணிகளை மேற்கொண்டு அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி—ஓசூர் பகுதியில் இருக்கிற சிட்கோ தொழிற்பேட்டையில் உடனடியாகத் தொழில்முனைவோர் தொழில் தொடங்க முன்வருவார்கள் என்ற பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்து, அந்தத் தொழில்முனைவோருக்கு உரிய ஆதரவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன்பே சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கப்பெற்றும்கூட, அங்கு இதுவரையிலும் ஓரிரு தொழிற்சாலைகளைத் தவிர, பெரிய அளவுக்கு அங்கே எந்தவிதமான தொழிலும் தொடங்குவதற்குத் தொழில்முனைவோர் முன்வரவில்லை. எனவே, அதற்குண்டான காரணத்தைக் கண்டறிந்து, உடனடியாக அங்கே பெரிய அளவில் தொழில்களைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி குறிப்பிட்டதைப்போல், அந்தத் தொழிற்பேட்டையில் ஏன் தொழில்முனைவோர் வரவில்லை என்ற காரணத்தைக் கண்டறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கு உண்டான பணியை அரசு முழுமையாக மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவரை துணைக் கேள்வி கேட்காமல் இருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை என்ற

அடிப்படையில் முதலாவதாக துணைக் கேள்வி கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், அந்தியூர் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தமாக 94 சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அரசுத் தொழிற்பேட்டைகள் (Government Estate) 35 ஆகும். மேலும், அந்தியூர் பகுதிக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொழிற்பேட்டை வேண்டுமென்று கேள்வி கேட்டுள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, அந்தியூர் பகுதியில் தொழில் முனைவோர் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்கும்பட்சத்தில், அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெற்று அரசு நிலம் இருப்பதாகத் தெரிய வந்தால், தொழிற்பேட்டை அமைப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**76—**

## மணல் குவாரிகள்

***7766—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணல் குவாரிகளை அரசுடைமையாக்க அரசு ஆவன செய்யுமா?